DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 26/2010
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜரில்லை எதிரிகள் தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | மதுரை |
| Father / Husband Name | தணகோடி |
| Village | சிறுகிராமம் |
| Taluk | கடலூர் |
| Age | 70 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **18.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிறுகிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன அய்யனார் எனது அண்ணன் மகன் ஆவார். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 3.30 மணிக்கு என்னுடன் சேர்த்து 9 நபர்கள் பொன்னேரியில் செங்கல் சூலையில் வேலை செய்துவிட்டு செங்கல்சூலையின் உரிமையாளர் அய்யப்பன் என்பவருக்கு சொந்தமான லாரியில் வந்துகொண்டிருந்தபோது அச்சிறுபாக்கம் அருகே வரும்போது மழை பெய்துகொண்டிருந்தது. அப்போது லாரியின் ஓட்டுநர் தூங்கிக்கொண்டு அருகில் இருந்த மின் கம்பத்தில் மோதியதில் லாரி அருகில் இருந்த பள்ளத்தில் விழுந்துவிட்டது. மேற்படி விபத்தில் இரண்டு நபர்கள் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள். மற்றவர்களுக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நாங்கள் அனைவரும் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் லாரியின் பின் புறத்தில் அமர்ந்து வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் அவ்வாறு லாரியின் பின்புறத்தில் அமர்ந்து வந்ததால் லாரியின் முன் புறம் என்ன நடந்தது என்று எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்தது அதிகாலை நேரம் என்பதால் நாங்கள் தூங்கிக்கொண்டு இருந்தோம் என்றாலும் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்தது தெரியும் என்றாலும் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை என்றால் சரிதான். நான் அதில் கையொப்பம் செய்தேன். எங்கள் ஊரை சேர்ந்த ஒருவர் எழுதினார். போலிசார் என்னை விசாரிக்கும் போது லாரியின் ஓட்டுநர் தூங்கிக்கொண்டு மின் கம்பத்தில் மோதி விட்டார் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வது போல் விபத்து நடக்கவில்லை

மதுரை

என்றாலும் விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் மகன் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த என் அண்ணன் மகனை மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டு பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

18/7/15

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 26/2010
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜரில்லை எதிரிகள் தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | கணேஷ் |
| Father / Husband Name | வீராசாமி |
| Village | [illegible] |
| Taluk | விழுப்புரம் |
| Age | 31 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **18.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பில்ராம்பட்டில் வசித்து கல் அறுக்கும் வேலை செய்து வருகிறேன். கடந்த 30.07.2009 ம் தேதி நாங்கள் பொன்னேரியில் செங்கல் சூலையில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பும்போது மேற்படி சூலையின் உரிமையாளர் அய்யப்பன் என்பவருக்கு சொந்தமான லாரியில் சுமார் 25 நபர்கள் வந்து கொண்டிருந்தபோது அச்சிறுபாக்கம் அருகே காலை 3.30 மணியளவில் நாங்கள் வந்த வாகனம் கவிழ்ந்து விட்டது. அப்போது லேசாக மழை பெய்து கொண்டிருந்தது. அய்யனார் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள். மற்ற நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. எனக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்து நடந்த நேரம் அதிகாலை நேரம் என்பதால் நான் தூங்கிக்கொண்டு வந்தேன் என்றாலும் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்தது பற்றி எனக்கு தெரியும் என்றாலும் சரிதான்.

V கணேசன்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 26/2010
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜரில்லை எதிரிகள் தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராமர் |
| Father / Husband Name | முருகபடையாட்சி |
| Village | திருதிராமம் |
| Taluk | கடலூர் |
| Age | 70 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **18.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிறுகிராத்தில் வசித்து கல் அறுக்கும் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2002 ம் வருடம் நாங்கள் பொன்னேரியில் செங்கல் சூலையில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பும்போது மேற்படி சூலையின் உரிமையாளர் அய்யப்பன் என்பவருக்கு சொந்தமான லாரியை அய்யப்பன் என்பவரின் அண்ணன் மகன் ஓட்டிவந்தார். மேற்படி லாரியில் சுமார் 30 நபர்கள் வந்து கொண்டிருந்தபோது அச்சிறுபாக்கம் அருகே காலை சுமார் 5.00 மணியளவில் நாங்கள் வந்த வாகனம் கவிழ்ந்து விட்டது. எனக்கு கை மற்றும் தோல்பட்டையில் காயங்கள் ஏற்பட்டது. என் மனைவி சந்திரா என்பவருக்கு பற்கள் விழுந்துவிட்டது. இரண்டு நபர்கள் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள். மற்ற நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. பின்னர் சென்னை அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரணையில் லாரியை அய்யப்பன் என்பவரின் அண்ணன் மகன் ஓட்டிவந்தார் என்றும் எனக்கு கை மற்றும் தோல்பட்டையில் காயங்கள் ஏற்பட்டது என்றும் என் மனைவி சந்திரா என்பவருக்கு பற்கள் விழுந்துவிட்டது என்றும் சொன்னேனா என்றால் சொன்னேன். விபத்து நடந்த நேரம் அதிகாலை நேரம் என்பதால் நான் தூங்கிக்கொண்டு வந்தேன் என்றாலும் சத்தம் கேட்டுதான் விபத்து நடந்தது பற்றி எனக்கு தெரியும் என்றாலும் சரிதான்.

LTI

ராமர்

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
18/11/25
Judicial Magistrate No.II
Madurantakam